



# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி






மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், அக்டோபர் 22, 2024 | இதழ் 192


## ஊழல் என்றால் தி.மு.க.; அதுதான் தி.மு.க.வுக்கு அடையாளம் கூட்டணி கட்சிகள் கைவிட்டால் தி.மு.க. வீழ்ந்து விடும் எடப்பாடி எச்சரிக்கை

சென்னை, 22 அக் 2024: கூட்டணி கட்சி தலைவர்கள் கைவிட்டால் தி.மு.க. விழுந்துவிடும் என்று- எடப்பாடி பழனிசாமி கூறினார்.

சேலம் மாவட்டம் கொங்கணாபுரம் ஒன்றிய, பேரூர் அண்ணா தி.மு.க. செயல்வீரர்கள், வீராங்கனைகள் ஆலோசனைக் கூட்டம் இன்று நடந்தது. இதில் சட்டமன்ற எதிர்கட்சி தலைவரும், அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டு பேசியதாவது:-

நீங்கள் அண்ணா தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்களை வீடு வீடாக ஒவ்வொரு வாக்காளர்களையும் சந்தித்து எடுத்து சொன்னதின் விளைவு 2021 -ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் எடப்பாடி தொகுதியில் 94 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் நாம் வெற்றி பெற்றோம். அதேபோல் சேலம் பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட 6 இன்றைக்கு துணை முதலமைச்சர் பேசுகிறார். இது பைனல் மேட்ச் இல்ல என அவர் சொன்னார். அடுத்து வரும் தேர்தல்தான் உண்மையான தேர்தல் என்றார். அந்த பைனல் மேட்ச்-சில் நாம் தான் வெற்றி பெறுவோம்.

அண்ணா தி.மு.க. தான் வெற்றி பெறும். விளையாட்டை ஆரம்பிச்சுட்டீங்க. அந்த விளையாட்டு வெற்றியினுடைய கோப்பையை அண்ணா தி.மு.க. தான் பெறும்.

வலிமையான அண்ணா தி.மு.க.வை வேண்டும் என்றே திட்டமிட்டு தி.மு.க. இன்றைக்கு நம்மை வீழ்த்த நினைக்கின்றார்கள். ஒருபோதும் நடக்காது. ஏனென்று சொன்னால் மக்கள் சக்தி எங்களிடம் உள்ளது. அவர்கள் கூட்டணியை மட்டுமே நம்பி இருக்கிறார்கள். தி.மு.க. பலமில்லை. கூட்டணி பலத்தை தான் தி.மு.க. நம்புகிறது.

கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். அதுபோல் தி.மு.க.வில் நிறைய கூட்டணி கட்சி தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தி.மு.க.வை பிடித்து கொண்டிருக்கிறார்கள். இதில் மேலே இருக்கிற கூட்டணி கட்சி தலைவர் கையை விட்டால் கடைசியில் இருக்கிற தி.மு.க.வின் கதி என்னாவது? அப்படித்தான் தி.மு.க.வின் நிலை இன்றைக்கு நிலவுகிறது.

கூட்டணி கட்சிக்காரர் கைவிட்டால் தி.மு.க. வீழ்ந்து போய் விடும். ஆனால் அண்ணா தி.மு.க. அப்படி இல்லை. வெற்றி, தோல்வி மாறி மாறி சந்தித்த கட்சி அண்ணா தி.மு.க. எந்த ஒரு கட்சிக்கும் நிரந்தர வெற்றி கிடையாது. எந்த ஒரு கட்சிக்கும் நிரந்தர தோல்வி கிடையாது. சந்தர்ப்ப சூழ்நிலையின் காரணமாக வெற்றி, தோல்வி அமைவது இயற்கை. அதை நாம் தமிழகத்தில் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.



அண்ணா தி.மு.க. கட்சி தொடங்கப்பட்டதில் இருந்து இன்று வரை 11 சட்டமன்ற தேர்தல்கள் நடைபெற்றுள்ளது. அதில் 7 சட்டமன்ற தேர்தலில் அண்ணா தி.மு.க. வெற்றி பெற்று இருக்கின்றது.

அண்ணா தி.மு.க. எவ்வளவு வலிமையாக இருக்கிறது என்பதை எண்ணி பார்க்க வேண்டும். 7 சட்டமன்ற தேர்தல்கள் வெற்றி பெற்ற காரணத்தினால் தான் இன்றைக்கு தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்கிக் கொண்டிருப்பதற்கு அடித்தளம் அமைத்தது அண்ணா தி.மு.க. அரசாங்கம்.

அதுமட்டுமல்ல 30 ஆண்டு காலம் தமிழகத்தில் ஆட்சியில் இருந்த கட்சி என்றால் அண்ணா தி.மு.க. தான். 30 ஆண்டு கால ஆட்சியில் அண்ணா தி.மு.க. ஆண்ட காரணத்தில் தான் எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்து அதை நடைமுறைப்படுத்தி அதனால் மக்களுக்கு நன்மை கிடைத்தது. அதனால் தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் என்ற பெயரை பெறுவதற்கு அடித்தளமாக விளங்கியது அண்ணா தி.மு.க. அரசாங்கம். தி.மு.க. அப்படி ஏதாவது சொல்ல முடியுமா? தி.மு.க. என்றால் ஊழல். ஊழல் என்றால் தி.மு.க. அதுதான் தி.மு.க.வுக்கு அடையாளம். 41 மாத ஆட்சி காலத்தில் என்ன சாதனை செய்தீர்கள்?

எதிரிகள் முதுகை காட்டி ஓடிவிட்டனர். தமிழகத்தில் தற்போது மக்கள் விரோத ஆட்சி நடக்கிறது. முதல்வரும், துணை முதல்வரும் அடிக்கடி சேலம் வருகிறார்கள்; எத்தனை முறை வந்தாலும் சேலம் அ.தி.மு.க.,வின் கோட்டை தான். அ.தி.மு.க.,வில் மட்டும் தான் சாதார தொண்டன் கூட உயர்பதவிக்கு வர முடியும். தமிழகத்தில் போதைப்பொருள் நடமாட்டத்தை தமிழக அரசு கட்டுப்படுத்தவில்லை. போதைப்பொருள் நடமாட்டம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதாக காவல்துறை தலைமை இயக்குநரே கூறியுள்ளார்.

அண்ணா தி.மு.க.வில் தான் சாதாரண தொண்டன் உயர்ந்த நிலைக்கு வர முடியும். உயர்ந்த பதவிக்கு தொண்டன் வரக்கூடிய கட்சி அண்ணா தி.மு.க. வேறு எந்த கட்சியிலாவது முடியுமா?.

உங்களுடன் கிளை கழக செயலாளராக பணியை தொடங்கி உங்களுடைய பேராதரவினால் படிப்படியாக உயர்ந்து இன்றைக்கு கழகத்தின் பொதுச்செயலாளராக உங்கள் முன் நிற்கிறேன் என்று சொன்னால் உங்களுடைய உழைப்பு, ஆதரவு. அத்தனை பேரும் எந்தஒரு பிரதிபலனும் எதிர்பாராமல் கட்சிக்கு விசுவாசமாக உழைத்தீர்கள். அதனால் இன்றைக்கு எடப்பாடி தொகுதி அண்ணா தி.மு.க.வின் இரும்பு கோட்டையாக, எக்கு கோட்டையாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் எடப்பாடி பழனிசாமி கூறியதாவது:

அண்ணா தி.மு.க. ஆட்சியில் 36 ஆயிரம் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. அண்ணா தி.மு.க. ஆட்சியில் அனைத்து போராட்டங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. தேர்தலுக்கு இன்னும் ஒன்றரை ஆண்டு உள்ளது, அதற்குள் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். ஒவ்வொரு கட்சிக்கும் ஆட்சியை பிடிக்க ஆசை இருக்கலாம், ஆனால் மக்கள் தான் முடிவெடுப்பார்கள். தி.மு.க. கூட்டணியில் உள்ள கட்சிகள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்த தொடங்கியுள்ளனர்.

திரையுலகில் விஜய் முன்னணி நடிகராக விளங்கி வருகிறார்; அவருக்கென ரசிகர் பட்டாளம் உள்ளது; அவரும் பொது சேவை செய்யவேண்டுமென்று விரும்புகிறார்; கட்சி தொடங்கியுள்ளார்; த.வெ.க. மாநில மாநாடு வெற்றி பெற வாழ்த்துகள்.

விஜய் பொதுக்கூட்டத்திற்கு மட்டுமல்ல, அண்ணா தி.மு.க. போராட்டங்களுக்கும் தி.மு.க. அரசு அனுமதி மறுத்துள்ளது.

தி.மு.க.வில் நிறைய கூட்டணி கட்சி தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தி.மு.க.வை பிடித்து கொண்டிருக்கிறார்கள். இதில் மேலே இருக்கிற கூட்டணி கட்சி தலைவர் கையை விட்டால் கடைசியில் இருக்கிற தி.மு.க.வின் கதி என்னாவது? அப்படித்தான் தி.மு.க.வின் நிலை இன்றைக்கு நிலவுகிறது.

கூட்டணி கட்சியினர் கைவிட்டால் தி.மு.க. வீழ்ந்து போய் விடும். ஆனால் அண்ணா தி.மு.க. அப்படி இல்லை. வெற்றி, தோல்வி மாறி மாறி சந்தித்த கட்சி அண்ணா தி.மு.க. எந்த ஒரு கட்சிக்கும் நிரந்தர வெற்றி கிடையாது. எந்த ஒரு கட்சிக்கும் நிரந்தர தோல்வி கிடையாது. சந்தர்ப்ப சூழ்நிலையின் காரணமாக வெற்றி, தோல்வி அமைவது அமைவது இயற்கை. அதை நாம் தமிழகத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

வரும் 2026ம் ஆண்டு தேர்தலில் கூட்டணி ஆட்சி கோரிக்கையை அண்ணா தி.மு.க., ஏற்குமா என்ற கேள்விக்கு பதிலளித்த எடப்பாடி, 'தேர்தலுக்கு இன்னும் ஒன்றரை ஆண்டுகள் உள்ளது. அதற்குள் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்' என்றார்.

இவ்வாறு அவர் கூறினார்.

## இர்பான் மன்னிப்பு கேட்டாலும் விடமாட்டோம்: அமைச்சர் மா.சு டாக்டர் மீதும் சட்டப்படி நடவடிக்கை

சென்னை, 22 அக் 2024: குழந்தையின் தொப்புள் கொடியை வெட்டிய வீடியோவை வெளியிட்ட யூடியூபர் இர்பானை மன்னிக்க முடியாது என்று தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.




சென்னையை சேர்ந்த பிரபல யூடியூபரான இர்பான் - ஆசிபா தம்பதிக்கு கடந்த ஜூலை 24-ம் தேதி தனியார் மருத்துவமனையில் பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறக்கும்போது அறுவை சிகிச்சை அறையில் குழந்தையின் தொப்புள் கொடியை கத்திரிக்கோலால் வெட்டும் வீடியோவை தனது யூடியூப் சேனலில் பகிர்ந்திருந்தார். அந்த வீடியோவில், வீட்டில் இருந்து ஜூஸ் குடித்து விட்டு மருத்துவமனைக்கு வருதல், மருத்துவமனையில் பிரசவத்துக்கு முந்தைய கவனிப்பு மற்றும் பிரசவத்தின் போது நடக்கும் சம்பவங்கள் என அனைத்தையும் வீடியோ எடுத்து பதிவிட்டுள்ளார். இர்பானின் இந்த செயலுக்கு மருத்துவர்கள், சமூக ஆர்வலர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

ஏற்கெனவே, கடந்தாண்டு தனக்கு பிறக்கும் குழந்தையின் பாலினத்தை துபாய் நாட்டில் பரிசோதனை செய்து, அது தொடர்பான வீடியோவை இர்பான் வெளியிட்டது பெரும் சர்ச்சையானது. அந்த வீடியோ தொடர்பாக பதிலளிக்குமாறு இர்பானுக்கு, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (டிஎம்எஸ்) நோட்டீஸ் அனுப்பியது. இதையடுத்து, அந்த அந்த வீடியோவை யூடியூபில் இருந்து நீக்கினார்.

தனது செயலுக்கு மன்னிப்பு கேட்டு வீடியோ வெளியிட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. இதுவரை மன்னிப்பு கேட்டு வீடியோ வெளியிடாத இர்பான், மனைவியின் பிரசவத்தில் குழந்தையின் தொப்புள் கொடியை கத்திரிக்கோலால் வெட்டும் வீடியோவை வெளியிட்டு மீண்டும் சர்ச்சையில் சிக்கியுள்ளார். இந்த விவகாரத்தில் யூடியூபர் இர்பான், மருத்துவர், மருத்துவமனை மீது நடவடிக்கை சுகாதாரத் துறை முடிவு செய்திருந்து.

இதுகுறித்து தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது: "

குழந்தையின் தொப்புள் கொடியை வெட்டிய வீடியோவை வெளியிட்ட இர்பானை மன்னிக்க முடியாது. இந்தமுறை இர்பான் மன்னிப்பு கேட்டாலும்,



விடமாட்டோம். அவர் மன்னிப்புக் கேட்டாலும், அதை ஏற்க முடியாது. இர்பான் மீது நடவடிக்கை எடுப்பதில் அரசியல் பின்புலம் இல்லை. மருத்துவர் நிவேதிதா மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. அவர் பயிற்சியை தொடர தடை விதிக்க மருத்துவ கவுன்சில் சார்பில் பரிந்துரைக்கப்படும். தவறு செய்தவர்களுக்கு அரசு நிச்சயம் தண்டனை வழங்கும்." என்று அவர் கூறினார்.


PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

செவ்வாய், அக்டோபர் 22, 2024

# ஸ்பிரிங்கர் நேச்சரின் இந்திய ஆராய்ச்சிப் பயணம் 2024 வேலூர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி, வேலூரில் நிறைவடைகிறது

*வேலூர், 22 அக் 2024:* 9 மாநிலங்கள் மற்றும் 15 நகரங்கள் மற்றும் 24 முன்னணி கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்த பயணத்திற்குப் பிறகு, ஸ்பிரிங்கர் நேச்சர் இந்தியா ஆராய்ச்சி சுற்றுப்பயணம் 2024 வெற்றிகரமாக வேலூர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (விஐடி, விஐடி), வேலூரில் நிறைவடைந்தது. தில்லியில் ஐ சி எஸ் எஸ் ஆர் இன் உறுப்பினர் செயலாளரான பேராசிரியர் தனஞ்சய் சிங் அவர்களால் கொடியசைக்கப்பட்ட இந்த லட்சிய முயற்சியானது, இந்தியா முழுவதிலும் உள்ள கல்விச் சூழல் அமைப்புகளை இணைக்கவும், திறந்த அணுகல், ஆராய்ச்சி ஒருமைப்பாடு மற்றும் உலகளாவிய ஆராய்ச்சித் தலைவராக இந்தியாவின் எதிர்காலம் பற்றிய விவாதங்களை வளர்க்கவும் முயன்றது.

ஐ ஐ எம் கள், ஜெ என் யூ, பிட்ஸ் பிலானி மற்றும் பல்வேறு ஐ சி எஸ் எஸ் ஆர் - இணைந்த நிறுவனங்கள் உட்பட பலதரப்பட்ட அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் ஆரம்ப நிலை மற்றும் அனுபவம் வாய்ந்த ஆராய்ச்சியாளர்களுடன் இந்த சுற்றுப்பயணம் இடம்பெற்றது. இந்தச் சுற்றுப்பயணம், தங்கள் ஆராய்ச்சித் துறைகளில் முன்மாதிரியான பணிகளைச் செய்த 100 பெண் ஆராய்ச்சியாளர்களையும் அங்கீகரித்துள்ளது. மும்பையில் உள்ள டாடா இன்ஸ்டிடியூட் ஆஃப் சோஷியல் சயின்ஸில் (டி ஐ எஸ் எஸ்) க்யூரியஸ் ஜர்னல் ஆஃப் பிஸினஸ் அண்ட் எகனாமிக்ஸ் என்ற முழுமையான திறந்த அணுகல் இதழின் துவக்கம் ஒரு முக்கிய சிறப்பம்சமாகும், இது திறந்த அணுகல் வெளியீட்டில் இந்தியாவின் பங்களிப்பை விரிவுபடுத்துவதில் ஒரு முக்கிய படியாகும்.

சுற்றுப்பயணத்தை வெற்றிகரமாக முடித்தது குறித்து பேசிய ஸ்பிரிங்கர் நேச்சர் இந்தியாவின் நிர்வாக இயக்குனர் வெங்கடேஷ் சர்வசித்தி கூறியதாவது: "இந்திய ஆராய்ச்சி சுற்றுப்பயணம் 2024, இந்தியாவின் சிறந்த ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சிந்தனைத் தலைவர்களுடன் நேரடியாக தொடர்புகொள்வதற்கான தனித்துவமான வாய்ப்பை எங்களுக்கு வழங்கியது. நாங்கள் விலைமதிப்பற்ற நுண்ணறிவுகளைப் பெற்றுள்ளோம். பிராந்தியங்கள் முழுவதிலும் உள்ள ஆராய்ச்சி சமூகத்தின் தேவைகள், சவால்கள் மற்றும் அபிலாஷைகள் ஆகியவற்றில் தனிப்பட்ட தொழில் மற்றும் தேசிய முன்னேற்றம் ஆகிய இரண்டையும் விரைவுபடுத்துவதில் திறந்த அணுகல் மற்றும் ஆராய்ச்சி ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது. இந்திய ஆராய்ச்சியாளர்கள் உலக அரங்கில் செழிக்க உதவுகிறது."

ஐ சி எஸ் எஸ் ஆர் இன் உறுப்பினர் செயலாளரான பேராசிரியர் தனஞ்சய் சிங், ஒத்துழைப்பு குறித்த தனது எண்ணங்களை வெளிப்படுத்தினார்:

"ஸ்பிரிங்கர் நேச்சர் நிறுவனத்துடன் இணைந்து இந்தியா ஆராய்ச்சி சுற்றுப்பயணம் 2024 இல் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்தச் சுற்றுப்பயணம் ஒரு ஆற்றல்மிக்க கருத்துப் பரிமாற்றத்தை ஊக்குவித்தது மற்றும் வெளியீட்டில், குறிப்பாக சமூக அறிவியலில் உருவாகி வரும் முன்னுதாரணங்களை ஆராய்ச்சியாளர்களுக்கு உணர்த்த உதவியது. இந்த ஒத்துழைப்பு நிறுவன ஆராய்ச்சி முயற்சிகளை உலகளாவிய தரத்துடன் சீரமைப்பதில் முக்கியமான படி, அதன் மூலம் இந்திய ஆராய்ச்சியை உலகளவில் அணுகக்கூடியதாகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் ஆக்குகிறது.

விஐடி வேலூர் நிறுவனர் மற்றும் அதிபர் டாக்டர் ஜி விஸ்வநாதன், இறுதி நிகழ்வை நடத்துவது குறித்த தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டார்: "ஸ்பிரிங்கர் நேச்சர் இந்தியா ரிசர்ச் டூர் 2024 இன் நிறைவு அமர்வை விஐடி நடத்தும் வாய்ப்பைப் பெற்றதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். இந்த முயற்சி முக்கியப் பங்கு வகிக்கிறது. எங்கள் கல்விச் சமூகத்தினரிடையே திறந்த அணுகல் மற்றும் ஆராய்ச்சி ஒருமைப்பாடு பற்றிய விழிப்புணர்வை வளர்ப்பதில், ஸ்பிரிங்கர் நேச்சர் உடனான எதிர்கால ஒத்துழைப்பை நாங்கள் எதிர்நோக்குகிறோம், இது விஐடி மற்றும் அதற்கு அப்பால் உள்ள ஆராய்ச்சி சூழலை மேலும் மேம்படுத்தும்.

ஸ்பிரிங்கர் நேச்சர் இந்தியா ரிசர்ச் டூர் 2024, வெளிப்படைத்தன்மை, அணுகல்தன்மை மற்றும் ஆராய்ச்சியில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான நிறுவனத்தின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது. நாடு முழுவதும் உள்ள அறிஞர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் நேரடியாக ஈடுபடுவதன் மூலம், ஸ்பிரிங்கர் நேச்சர் இந்தியாவை ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளில் உலகளாவிய தலைவராக வெளிவர வழி வகுக்க உதவுகிறது.

# கனடாவின் குற்றச்சாட்டுகளுக்கு இந்தியா உறுதியுடன் பதிலளித்துள்ளது, ஆறு தூதர்களை வெளியேற்றியது

*சென்னை, 22 அக் 2024:* சமீபத்திய குற்றச்சாட்டுகளுக்கு வலுவான பதிலடியாக, இந்தியா திங்கள்கிழமை ஆறு கனேடிய தூதரக அதிகாரிகளை வெளியேற்றியது. ஜூன் 2023 இல் காலிஸ்தான் ஆதரவாளர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் படுகொலை செய்யப்பட்டதில் இந்திய இராஜதந்திரிகளுக்கு தொடர்பு இருப்பதாக கனடாவின் குற்றச்சாட்டுகளை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியா தனது உயர் ஸ்தானிகர் சஞ்சய் குமார் வர்மா மற்றும் கனடாவிலிருந்து மற்ற தூதர்களை திரும்பப் பெறவும் முடிவு செய்துள்ளது. இந்த தீர்க்கமான நடவடிக்கை, நிஜ்ஜார் கொலையில் இந்திய தூதர்களுக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்தி, கனடாவின் சமீபத்திய இராஜதந்திர தொடர்பை நிராகரிக்கிறது.

இந்திய வெளியுறவு அமைச்சகம் (எம் ஈ ஏ) செயல் உயர் ஆணையர் ஸ்டீவர்ட் ரோஸ் வீலர் உட்பட ஆறு கனேடிய தூதரக அதிகாரிகளை இரவு 11:59 மணிக்குள் இந்தியாவை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளது. அக்டோபர் 19. இதற்கு முன்னதாக, இந்திய அரசு டெல்லியில் உள்ள கனேடிய உயர் ஸ்தானிகராலயத்தை அழைத்து, "கனடாவில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகர் மற்றும் பிற தூதரக அதிகாரிகளை ஆதாரமற்ற முறையில் குறிவைப்பது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது" என்று கூறியது.

அந்த அழைப்பாணை மேலும் வலியுறுத்தியது, "தீவிரவாதம் மற்றும் வன்முறையின் கொந்தளிப்பான சூழலில் ட்ரூடோ அரசாங்கத்தின் நடவடிக்கைகள் நமது தூதர்களின் பாதுகாப்பை சமரசம் செய்துள்ளன. அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தற்போதைய கனேடிய அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை நாங்கள் இனி நம்பவில்லை. எனவே, இந்திய அரசு திரும்பப் பெற முடிவு செய்துள்ளது. அதன் உயர் ஸ்தானிகர் மற்றும் பிற இலக்கு தூதர்கள் மற்றும் அதிகாரிகள்."

எம் ஈ ஏ மேலும் கூறியது, "இந்தியாவிற்கு எதிரான பிரிவினைவாதம் மற்றும் தீவிரவாதத்திற்கு ட்ரூடோ அரசாங்கத்தின் ஆதரவிற்கு பதிலளிக்கும் விதமாக, மேலதிக நடவடிக்கைகளை எடுக்க எங்களுக்கு உரிமை உள்ளது என்பதை நாங்கள் கனடாவிடம் தெளிவுபடுத்தியுள்ளோம்."

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பல்வேறு உள்நாட்டு சவால்களை எதிர்கொண்டு வருவதால், இந்த விவகாரம் அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று இந்திய அரசு கடும் ஆட்சேபனை தெரிவித்தது. ஞாயிற்றுக்கிழமை, கனடாவில் இருந்து எங்களுக்கு தூதரக தகவல் கிடைத்தது. கமிஷனர் மற்றும் பிற தூதர்கள் இந்த அபத்தமான குற்றச்சாட்டுகளை உறுதியாக நிராகரிக்கிறார்கள், ட்ரூடோ அரசாங்கம் தனது வாக்கு வங்கியைப் பாதுகாக்க பயன்படுத்துகிறது.

பிரிவினைவாத இயக்கங்கள் இந்தியா-கனடா உறவில் குறிப்பிடத்தக்க அழுத்தத்தை ஏற்படுத்துவது இது முதல் முறையல்ல. 1980 களில், ஜஸ்டின் ட்ரூடோவின் தந்தை, முன்னாள் பிரதமர் பியர் ட்ரூடோ, கனேடிய நிர்வாகம் காலிஸ்தானி தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறியபோது, இந்தியாவுடனான உறவை தவறாகக் கையாண்டதற்காக விமர்சிக்கப்பட்டார்.

இந்தியாவை நோக்கிய ஜஸ்டின் ட்ரூடோவின் ஆக்ரோஷமான நிலைப்பாடு, அவரது உள்நாட்டுப் புகழ் குறைந்து வருவதோடு, அவரது தலைமைக்கு எதிராக எழும் அதிருப்தியுடன் ஒத்துப்போகிறது. அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள கூட்டாட்சித் தேர்தலுக்கு முன்னதாக அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சீக்கிய சமூகத்தை ஈர்க்கும் முயற்சியாக இந்த நடவடிக்கை பரவலாகக் கருதப்படுகிறது. அதிகரித்து வரும் குற்ற விகிதங்கள், நெருக்கடியான சுகாதார அமைப்பு மற்றும் கனடாவில் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு ஆகியவற்றின் மத்தியில், மிஜீவஷீவ கருத்துக் கணிப்பில் 26% கனேடியர்கள் மட்டுமே ட்ரூடோவை பிரதமருக்கான சிறந்த வேட்பாளராகக் கருதுகின்றனர். அவரது புகழ் இப்போது எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொய்லிவ்ரேவை விட பின்தங்கியுள்ளது.

ட்ரூடோவின் அரசாங்கம் சமீபத்தில் தேர்தல் பின்னடைவை எதிர்கொண்டது, ஆளும் லிபரல் கட்சிக்கு பாரம்பரியமாக பாதுகாப்பான இடமான மாண்ட்ரீலில் ஒரு ஆச்சரியமான தோல்வி உட்பட. கூடுதலாக, காலிஸ்தான் ஆதரவாளரான ஜக்மீத் சிங்கின் புதிய ஜனநாயகக் கட்சி (என் டி பி) பலவீனமடைந்து வரும் லிபரல் அரசாங்கத்தின் ஆதரவை வாபஸ் பெற்றுள்ளது. இதற்குப் பதிலடியாக, சீக்கியர்களின் வாக்குகளைப் பெறுவதற்கான முயற்சியில் இந்தியா மீது ட்ரூடோ நிர்வாகம் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதாகத் தெரிகிறது. கனடாவில் 770,000 க்கும் மேற்பட்ட சீக்கியர்கள் வசிக்கின்றனர், அவர்கள் நாட்டின் நான்காவது பெரிய இன சமூகமாக உள்ளனர், சமூகத்தின் ஒரு பகுதியினர் காலிஸ்தான் இயக்கத்தை ஆதரிக்கின்றனர்.

# டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார், டொயோட்டா ரூமியோனின் லிமிடெட் ஃபெஸ்டிவல் பதிப்பை அறிமுகப்படுத்துகிறது

*சென்னை, 22 அக் 2024:* மதுரை இந்த பண்டிகைக் காலத்தை கார் வாங்குபவர்களுக்கு சிறப்பானதாக மாற்றும் வகையில், டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் (டி கே எம்) இன்று டொயோட்டா ரூமியோன் இன் பண்டிகை பதிப்பை அறிமுகப்படுத்தியது. இந்த லிமிடெட்-எடிஷன், பிரத்யேக டொயோட்டா ஜென்யூன் அக்சஸரி (டி ஜி ஏ) பேக்கேஜ்கள், ரூமியோன் இன் அழகியல் மற்றும் வசதியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது, சீசனை நேர்த்தியாகவும் ஸ்டைலாகவும் கொண்டாடுவதற்கான சரியான மொபிலிட்டி தேர்வாகும்.




ரூமியோன் இன் இந்த பண்டிகை பதிப்பு, அனைத்து கிரேடுகளிலும் கிடைக்கும், ரூ.20,608 மதிப்புள்ள டீலர் பொருத்தப்பட்ட டிஜிஏ பேக்கேஜுடன் வருகிறது, இது வாடிக்கையாளர்கள் பிரீமியம் அனுபவத்தை அனுபவிப்பதை உறுதி செய்கிறது.

பண்டிகை பதிப்புகள் அறிமுகம் குறித்து, டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார், விற்பனை-சேவை-பயன்படுத்தப்பட்ட கார் வர்த்தகத்தின் துணைத் தலைவர் திரு. சபரி மனோகர் கூறுகையில், "அழகியல் மற்றும் அழகுக்கு மட்டும் அல்லாமல் லிமிடெட் எடிஷன் டொயோட்டா ரூமியோனை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் . ஆறுதல் ஆனால் ஒரு சிறந்த ஓட்டுநர் அனுபவத்தை உறுதி செய்கிறது. தீபாவளிக்கு முன்பிருக்கும் பண்டிகை உற்சாகத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு விதிவிலக்கான மதிப்பை வழங்குவதற்கான எங்கள் அர்ப்பணிப்பு மாறாமல் உள்ளது. பிரீமியம் ஆக்சஸரீஸ், விற்பனைக்குப் பிந்தைய சிறந்த சேவையுடன் கூடிய நீட்டிக்கப்பட்ட உத்தரவாதங்கள், இந்திய வாங்குபவர்களின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் உன்னிப்பாக வடிவமைக்கப்பட்டது போன்ற அம்சங்கள் மூலம் புதுமையை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர் திருப்திக்கான எங்கள் அர்ப்பணிப்பை இந்த சிறப்புப் பதிப்பு வெளிப்படுத்துகிறது.

# டாடா சால்ட் நிறுவனம், உலக அயோடின் குறைபாடு விழிப்புணர்வு தினத்தில், அயோடின் குறைபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கான உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது!

*சென்னை, 22 அக் 2024:* அயோடின் சேர்க்கப்பட்ட உப்பில் இந்தியாவின் முன்னோடியும், சந்தையில் முன்னணியில் உள்ள நிறுவனமுமான டாடா சால்ட், உலக அயோடின் குறைபாடு விழிப்புணர்வு தினத்தில் (டபிள்யூ ஐ டி டி), நாடு முழுவதும் உள்ள குழந்தைகளிடையே அயோடின் குறைபாட்டால் ஏற்படும் பாதிப்புகளை (ஐ டி டி) எதிர்த்துப் போராடுவதற்கான தனது வலுவான நிலையை மீண்டும் உறுதி செய்கிறது. நாட்டின் முதல் தேசிய பிராண்டட் அயோடின் உப்பு நிறுவனமான டாடா சால்ட், மன வளர்ச்சிக்கு அவசியமான முக்கியமான நுண்ணூட்டச்சத்தான அயோடின் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் தொடர்ந்து முக்கியப் பங்கு வகிக்கிறது. குறிப்பாக குழந்தைப் பருவத்தில் இந்தச் சத்தின் அவசியம் குறித்து டாடா விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

1983-ம் ஆண்டு முதல், டாடா சால்ட், அயோடின் குறைபாட்டை நிவர்த்தி செய்ய உதவுவதில் முன்னணியில் உள்ளது. பல கோடிக் கணக்கான இந்தியக் குடும்பங்களுக்கு நம்பகமான உப்பாக இது மாறியுள்ளது. நிலையான தரத்திற்குப் பெயர் பெற்ற டாடா சால்ட், அயோடின் சேர்க்கப்பட்ட உப்பை நாடு முழுவதும் எளிதில் கிடைக்கக் கூடியதாக மாற்றியுள்ளது. இது ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கு உதவுகிறது. ஒரு பாரம்பரிய பிராண்டான டாடா சால்ட், இந்தியா முழுவதும் உள்ள குழந்தைகளுக்கு சரியான அளவு கொண்ட அயோடின் உப்பைப் பெறுவதை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. 2018-19-ம் ஆண்டில் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட அயோடின் கணக்கெடுப்பில், நாட்டின் மக்கள் தொகையில் 55 சதவீதம் பேர் மட்டுமே அயோடின் சேர்க்கப்பட்ட உப்பின் பலன்களைப் பற்றி அறிந்திருக்கிறார்கள் என தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து டாடா சால்ட் நிறுவனம், மக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதில் அயோடின் வகிக்கும் முக்கிய பங்கு குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதில் உறுதிபூண்டுள்ளது.

டாடா கன்ஸ்யூமர் புராடக்ட்ஸ் பேக்கேஜ்டு ஃபுட்ஸ் இந்தியா நிறுவனத்தின் தலைவர் தீபிகா பான் இது குறித்துக் கூறுகையில், "டாடா சால்ட் பிராண்ட், அயோடின் குறைபாட்டையும் அதனால் ஏற்படும் சவால்களையும் எதிர்கொள்ள உதவும் வகையில் இயல்பான அளவு அயோடின் கலந்த உப்பை வழங்குவதில் அர்ப்பணிப்புடன் உள்ளது. எங்களது பிராண்ட் பல ஆண்டுகளாக பாரம்பரியமாக நம்பிக்கையை உருவாக்கியுள்ளது. கோடிக் கணக்கான இந்தியக் குடும்பங்கள் நம்பியிருக்கும் தரத்தை, தொடர்ந்து இது வழங்கி வருகிறது. ஒட்டுமொத்த நல்வாழ்வை ஆதரிக்கும் புதுமையான தீர்வுகளை உருவாக்கும் எங்கள் அர்ப்பணிப்பு இந்த நம்பிக்கையை வலுப்படுத்துகிறது. உலக அயோடின் குறைபாடு விழிப்புணர்வு தினத்தில், அயோடின் குறைபாட்டால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தை நாங்கள் மீண்டும் உறுதி செய்கிறோம். நல்ல மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், அனைவருக்கும் ஆரோக்கியமான எதிர்காலத்திற்குப் பங்களிப்பதற்கும், எங்களது பணியில் இணைய அனைவரையும் அழைக்கிறோம்." என்றார்.

பல வளரும் நாடுகளைப் போலவே, இந்தியாவும் 'மறைக்கப்பட்ட பசி' என்ற வடிவத்தில் குறிப்பாக வளர்ந்து வரும் குழந்தைகளிடையே குறிப்பிடத்தக்க பொது சுகாதார சவாலை எதிர்கொள்கிறது. அயோடின், இரும்புச் சத்து, ஃபோலிக் அமிலம், வைட்டமின் ஏ, ஜிங்க் போன்ற முக்கியமான நுண்ணூட்டச்சத்துக்களின் குறைபாடுகளால் ஏற்படும் இந்த நிலை, குழந்தைகளின் வளர்ச்சியைப் பாதிக்கும். அயோடின் சத்து, சாதாரண வளர்ச்சி, தைராய்டு செயல்பாடு, மூளை வளர்ச்சி ஆகியவற்றுக்குத் தேவையான ஒரு அத்தியாவசிய நுண்ணூட்டச்சத்து ஆகும்.

அயோடின் குறைபாட்டை நிவர்த்தி செய்வதன் மூலமும், அயோடின் உப்பு ஒவ்வொரு வீட்டிற்கும் சென்றடைவதை உறுதி செய்வதன் மூலமும் தேசிய அளவில் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான செயல்பாட்டில் டாடா சால்ட் உறுதியாக உள்ளது. அயோடின் குறைபாட்டை நீக்குவதற்கும், குடும்பங்கள் உடல்நலம் குறித்து தகவலறிந்த தேர்வுகளை மேற்கொள்வதற்கும் வகை செய்யும் இந்தத் தொடர்ச்சியான முயற்சிகள், ஆரோக்கியமான, அதிக நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட இந்தியாவை உப்பின் மூலம் உருவாக்கும்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## பிரீமியம் டிஜிஏ பேக்கேஜ்கள் கொண்ட கிளான்ஸாவின் பிரத்தியேகமான ‘ஃபெஸ்டிவ் லிமிடெட் எடிஷன்’ அறிமுகம், நடை, வசதி மற்றும் கௌரவத்தை மேலும் உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டது




மதுரை, 22 அக் 2024: பண்டிகை உற்சாகத்தைக் குறிக்கும் வகையில், டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் இன்று டொயோட்டா கிளான்சாவின் ‘ஃபெஸ்டிவல் லிமிடெட் எடிஷன்’ அறிமுகத்தை அறிவித்தது. இந்த பண்டிகை காலத்தில் கிளான்ஸா இன் மேம்பட்ட நடை, செயல்திறன் மற்றும் வசதியுடன் தங்கள் ஓட்டுநர் அனுபவத்தை உயர்த்துவதற்காக வடிவமைக்கப்பட்ட பிரத்யேக டீலர் பொருத்தப்பட்ட டொயோட்டா ஜென்யூன் அசஸரீஸ் (டி ஜி ஏ) பேக்கேஜ்களை வாடிக்கையாளர்கள் இப்போது அனுபவிக்க முடியும்.

அதன் மேம்பட்ட தொழில்நுட்பம், நேர்த்தியான வடிவமைப்பு மற்றும் அதிக எரிபொருள் திறன் ஆகியவற்றிற்காக கொண்டாடப்படுகிறது, 2019 முதல், வரையறுக்கப்பட்ட பதிப்பு டொயோட்டா க்ளான்சா ரூ.20,567 மதிப்புள்ள 13 பிரத்தியேக டி ஜி ஏ பேக்கேஜுடன் வருகிறது. பிரீமியம் குரோம் மற்றும் பிளாக் பாடி சைட் மோல்டிங், பின் கதவு அலங்கார குரோம் மற்றும் ஓ ஆர் வி எம் கார்னிஷ் குரோம் போன்ற தனித்துவமான கூறுகளை இந்த வாகனம் கொண்டுள்ளது. கூடுதல் சிறப்பம்சங்களில் 3டி ஃப்ளோர்மேட், டோர் விசர் பிரீமியம் மற்றும் கூடுதல் வசதிக்காக கழுத்து மெத்தைகள் (கருப்பு & வெள்ளி) ஆகியவை அடங்கும். டொயோட்டா க்ளான்ஸாவின் ஸ்டைலான கவர்ச்சியானது, பின்புற பம்பர், ஃபெண்டர் மற்றும் பின் பக்க பிரதிபலிப்பான் மற்றும் வரவேற்பு கதவு விளக்கு ஆகியவற்றில் குரோம் அலங்காரங்களுடன் மேலும் செறிவூட்டப்பட்டுள்ளது, இது ஒரு பிரீமியம் தொடுதலைச் சேர்க்கிறது..

டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார், டொயோட்டா கிளான்ஸாவின் ‘ஃபெஸ்டிவல் லிமிடெட் எடிஷன்’ டொயோட்டா கிளான்ஸா இன் பண்டிகை வரையறுக்கப்பட்ட பதிப்பின் அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்த டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார், விற்பனை-சேவை-பயன்படுத்தப்பட்ட கார் வர்த்தகத்தின் துணைத் தலைவர் திரு. சபரி மனோகர், "இந்த பண்டிகைக் காலத்தில் வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் உற்சாகத்தை ஏற்படுத்துவதே எங்கள் நோக்கம். டொயோட்டா கிளான்சாவின் 'ஃபெஸ்டிவல் லிமிடெட் எடிஷன்' அறிமுகத்துடன். கிளான்ஸா அதன் டைனமிக்-ஸ்போர்ட்டி வடிவமைப்பு, மேம்பட்ட அம்சங்கள் மற்றும் சிறந்த செயல்திறன் ஆகியவற்றின் கலவைக்காக எப்போதும் பாராட்டப்படுகிறது, மேலும் இந்த வரையறுக்கப்பட்ட பதிப்பின் மூலம், அதன் கவர்ச்சியை மேலும் மேம்படுத்துகிறோம்.

## டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார், அர்பன் க்ரூஸர் டெய்சரின் பிரத்யேக லிமிடெட் எடிசனுடன் பண்டிகைக் காலத்தைக் கொண்டாடுகிறது




மதுரை, 22 அக் 2024: பண்டிகை உற்சாகத்தை அதிகரிக்கும் வகையில், டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் (டிகேஎம்) அதன் மிகவும் பிரபலமான மாடலான அர்பன் க்ரூஸர் டெய்சரின் வரையறுக்கப்பட்ட பதிப்பை இன்று அறிவித்துள்ளது. இந்த சிறப்பு பதிப்பு, ஸ்டைலை மேம்படுத்துதல் மற்றும் பிரீமியம்-நெஸ் ஆகியவற்றை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது, வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் உயர்த்துவதற்காக நன்கு தொகுக்கப்பட்ட டொயோட்டா ஜென்யூன் அசஸரீஸ் (டி ஜி ஏ) தொகுப்புடன் வருகிறது.

அனைத்து டர்போ வகைகளிலும் கிடைக்கும், லிமிடெட் எடிஷன் ரூ.20,160 இன் விரிவான டி ஜி ஏ தொகுப்புடன் வருகிறது, இது பல்துறை யூசி டெய்சர் இன் வெளிப்புறம் மற்றும் உட்புறத்தை மேம்படுத்துகிறது. முக்கிய அம்சங்களின் பட்டியல்:

கிரானைட் சாம்பல் மற்றும் சிவப்பு வண்ணங்களில் ஸ்பாய்லர்களின் கீழ் முன் மற்றும் பின்புறம்

பிரீமியம் கதவு சில் காவலர்கள், ஹெட்லேம்ப்கள் மற்றும் முன் கிரில்லுக்கான குரோம் அழகுபடுத்துகிறது, உடல் பக்க மோல்டிங், கதவு விசர் பிரீமியம், அனைத்து வானிலை 3டி விரிப்புகள் மற்றும் வரவேற்பு கதவு விளக்கு

அனைத்து டி ஜி ஏ டீலர்ஷிப்களில் சான்றளிக்கப்பட்ட டொயோட்டா தொழில்நுட்ப வல்லுநர்களால் பொருத்தப்படும், இது மிக உயர்ந்த தரம் மற்றும் வாடிக்கையாளர் திருப்தியை உறுதி செய்கிறது. பண்டிகை பதிப்பின் அறிமுகம் குறித்து கருத்து தெரிவிக்கையில், டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார், விற்பனை-சேவை-பயன்படுத்தப்பட்ட கார் வர்த்தகத்தின் துணைத் தலைவர் திரு. சபரி மனோகர், “டொயோட்டாவில், எங்களின் முயற்சிகள் எப்போதும் எங்கள் வாடிக்கையாளர்களின் சிறப்புப் பகுதியாக இருப்பதை மையமாகக் கொண்டுள்ளன. மகிழ்ச்சிகரமான, வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட அனுபவங்களை வடிவமைப்பதில் எங்களின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் சந்தர்ப்பங்கள் மற்றும் கொண்டாட்டங்கள். அர்பன் க்ரூஸர் ஹைரைடர் பண்டிகை பதிப்பின் சமீபத்திய அறிமுகத்தைத் தொடர்ந்து, இந்த பண்டிகைக் காலத்தில் புதிய மற்றும் உற்சாகமான ஒன்றைக் கொண்டுவருவதற்காக வடிவமைக்கப்பட்ட அர்பன் க்ரூஸர் டைசர் பண்டிகை பதிப்பை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த புதிய சேர்த்தலில் எங்கள் வாடிக்கையாளர்கள் பெரும் மதிப்பைப் பெறுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

## ஸ்வைப் ரைட் ஸ்டுடியோஸ் மற்றும் திங்க் ஸ்டூடியோஸ் தயாரிப்பில் சித்தார்த் விஸ்வநாத் இயக்கத்தில் ஆர் ஜே பாலாஜி நாயகனாக நடிக்கும் ஆக்ஷன்-டிராமா திரைப்படம் ‘சொர்க்கவாசல்‘




சென்னை, 22 அக் 2024: ஆர் ஜே பாலாஜி முற்றிலும் மாறுபட்ட கதாபாத்திரத்தில் நாயகனாக நடிக்கும் ஆக்ஷன்-டிராமா திரைப்படமாக 'சொர்க்கவாசல்' உருவாகி வருகிறது. ஸ்வைப் ரைட் ஸ்டுடியோஸ் மற்றும் திங்க் ஸ்டுடியோஸ் சார்பில் சித்தார்த் ராவ் மற்றும் பல்லவி சிங் தயாரிக்கும் இப்படத்தை பா ரஞ்சித் இயக்கத்தில் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த 'கபாலி' மற்றும் 'காலா' திரைப்படங்களில் உதவி மற்றும் இணை இயக்குநராக பணியாற்றிய சித்தார்த் விஸ்வநாத் இயக்குகிறார்.

இயக்குநர் செல்வராகவன், ஒளிப்பதிவாளரும் நடிகருமாகிய நட்டி (நடராஜன் சுப்பிரமணியன்) மலையாள திரையுலகை சேர்ந்த பிரபலங்களான சானியா ஐயப்பன், ஷரஃப் உதீன் மற்றும் ஹக்கீம் ஷா, இயக்குநர் பாலாஜி சக்திவேல், கருணாஸ், இசையமைப்பாளர் அனிருத்தின் தந்தை ரவி ராகவேந்திரா, அந்தோணி தாசன், சாமுவேல் ராபின்சன் மற்றும் மௌரிஷ் ஆகியோர் சொர்க்கவாசல் திரைப்படத்தில் முக்கிய பாத்திரங்களை ஏற்றுள்ளனர்.

சிறையை பிரதான கதைக்களமாக கொண்டு உருவாகும் இந்தப் படம், சிறைச் சுவர்களுக்கு உள்ளே இருப்பவர்களின் கடுமையான வாழ்வியல் பயணத்திற்கு அழைத்துச் செல்லும் என்று இயக்குநர் சித்தார்த் விஸ்வநாத் தெரிவித்தார்.

‘சொர்க்கவாசல்' திரைப்படத்திற்காக தன்னை முழுவதுமாக மாற்றிக்கொண்டு கதாபாத்திரமாகவே மாறி, கடின உழைப்பை ஆர் ஜே பாலாஜி வழங்கியுள்ளார். இதர நடிகர், நடிகைகள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்களின் சிறப்பான பங்களிப்போடு அனைவரும் ரசிக்கக்கூடிய படமாக 'சொர்க்கவாசல்' உருவாகியுள்ளது என்று இயக்குநர் மேலும் கூறினார்.

இப்படத்தின் கதையை தமிழ்ப்பிரபா மற்றும் அஷ்வின் ரவிச்சந்திரன் ஆகியோருடன் இணைந்து இயக்குநர் சித்தார்த் விஸ்வநாத் எழுதியுள்ளார். மம்முட்டி நடித்து பெரும் வெற்றி பெற்ற 'பிரம்மயுகம்' படத்திற்கு இசையமைத்த கிறிஸ்டோ சேவியர் 'சொர்க்கவாசல்' திரைப்படத்தின் மூலம் தமிழில் அறிமுகம் ஆகிறார். ஒளிப்பதிவை பிரின்ஸ் ஆண்டர்சன் கவனிக்க, செல்வா ஆர் கே படத்தொகுப்பை கையாளுகிறார். கலை இயக்கம்: எஸ் ஜெயச்சந்திரன், சண்டை பயிற்சி: தினேஷ் சுப்பராயன், உடைகள் வடிவமைப்பு: ஸ்ருதி மஞ்சரி, உடைகள் தலைமை: அனந்தா நாகு, ஒப்பனை: சபரி கிரீசன், ஒலி வடிவமைப்பு: சுரேன் ஜி மற்றும் எஸ் அழகியக்கூத்தன், ஒலிப்பதிவு: வினய் ஸ்ரீதர், வி எஃப் எக்ஸ்: லார்வென் ஸ்டுடியோஸ், டிஐ: பிக்ஸெல் லைட் ஸ்டுடியோஸ், காஸ்டிங் இயக்குநர்: வர்ஷா வரதராஜன், பப்ளிசிட்டி வடிவமைப்பு: கபிலன் செல்லையா, மக்கள் தொடர்பு: நிகில் முருகன், ப்ரோமோஷன்ஸ்: ஏகேடி, ஆடிட்: ஃபினாங்கி கன்சல்டிங், லீகல்: டி எஸ் லீகல், ப்ரொடக்ஷன் கண்ட்ரோலர்: பி எஸ் ராஜேந்திரன், நிர்வாக தயாரிப்பு: விக்ரம் வைபவ் ஆர் எஸ், தயாரிப்பு ஆலோசனை: ஏ கே அனிருத், கிரியேட்டிவ் ஆலோசனை: கிருஷ்ணா மாரிமுத்து.

ஸ்வைப் ரைட் ஸ்டுடியோஸ் மற்றும் திங்க் ஸ்டுடியோஸ் நிறுவனங்கள் சார்பில் சித்தார்த் ராவ் மற்றும் பல்லவி சிங் தயாரிப்பில் சித்தார்த் விஸ்வநாத் இயக்கத்தில் ஆர் ஜே பாலாஜி நாயகனாக நடிக்கும் ஆக்ஷன்-டிராமா திரைப்படம் 'சொர்க்கவாசல்'. இதன் படப்பிடிப்பு நிறைவடைந்து போஸ்ட் ப்ரொடக்ஷன் பணிகள் நடைபெற்று வருகின்றன. மிக விரைவில் இப்படம் திரையரங்குகளில் வெளியாகும் என்று படக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

## இலங்கையில் கல்வியை மேம்படுத்த இந்தியா இரட்டிப்பு மானியம்



சென்னை, 22 அக் 2024: இலங்கையின் தோட்டப் பகுதிகளில் உள்ள தமிழ் சமூகத்திற்கான கல்வியை மேம்படுத்துவதற்காக இந்தியா தனது மானியத்தை இரட்டிப்பாக்கியுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, இந்த முயற்சிக்கு இந்தியாவின் மொத்த அர்ப்பணிப்பு 600 மில்லியன் இலங்கை ரூபாவாகும்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் இலங்கையின் கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் ஜே.எம்.திலகா ஜெயசுந்தர ஆகியோர் இந்த உதவித்தொகையை முறைப்படுத்துவதற்கான இராஜதந்திர கடிதங்களில் கையெழுத்திட்டு பரிமாறிக்கொண்டனர்.

இந்திய உயர்ஸ்தானிகராலயம் கூறியது, “இந்தத் திட்டம் இலங்கையின் முக்கியமான கல்வித் துறையில் இந்தியாவின் பல கடந்தகால மற்றும் நடந்து வரும் அபிவிருத்தி கூட்டு முயற்சிகளின் ஒரு பகுதியாகும்.” இலங்கை அரசாங்கத்தால் அடையாளம் காணப்பட்ட ஒன்பது தோட்டப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் திட்டத்தில், ஆறு மத்திய மாகாணத்திலும், தலா ஒன்று ஊவா, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் அமைந்துள்ளன.

இந்த முயற்சியானது, இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்தின் 200 ஆண்டுகளை நினைவுகூரும் வகையில் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட 750 மில்லியன் இந்திய ரூபாயின் பரந்த பல்துறை இந்திய மானிய உதவியின் ஒரு பகுதியாகும்.

இந்தியா தனது “அண்டை நாடுகளுக்கு முதலிடம்” கொள்கைக்கு இணங்க கல்வி உட்பட பல்வேறு துறைகளில் இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. அண்மையில், இந்த மானிய உதவியின் கீழ் மூன்று மாத ஆசிரியர் பயிற்சித் திட்டம் நிறைவடைந்தது, 19 இந்திய கல்வியாளர்களின் உதவியுடன் 2,000 இலங்கை ஆசிரியர்களுக்கு 40 மையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது.

# கனடாவின் குற்றச்சாட்டுகளுக்கு இந்தியா உறுதியுடன் பதிலளித்துள்ளது, ஆறு தூதர்களை வெளியேற்றியது

சென்னை, 22 அக் 2024: 2030 ஆம் ஆண்டுக்குள் 7 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கி இந்தியா நகரும் நிலையில், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (எம் எஸ் எம் ஈ) துறைக்கு தடையின்றி கடன் விநியோகமாவது மிக அவசியமான ஒன்று. இந்த வணிகக் கடன் வழங்கப்படும் நோக்கத்தை மேலும் மேம்படுத்தும் வகையில், டிரான்ஸ்யூனியன் சிபில் (டிரான்ஸ்யூனியன் சிபில்) நிறுவனம் இன்று சென்னையில் மல்டி-சிட்டி 'எம் எஸ் எம் ஈ கான்க்ளேவ்: இந்தியாவை மேம்படுத்த கிரெடிட்டை சாத்தியமாக்கல்' எனும் கருப்பொருளுடன் கருத்தரங்கை நடத்தியது. டிரான்ஸ்யூனியன் சிபில் நடத்திய பிரம்மாண்டமான எம் எஸ் எம் ஈ மாநாடானது, வேலைவாய்ப்பை உருவாக்குதல், பிராந்திய வளர்ச்சியை ஊக்குவித்தல், வருமான இடைவெளியைக் குறைத்தல் மற்றும் புதுமை & தொழில்முனைவு ஆகியவற்றை ஊக்குவிக்கும், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் எம் எஸ் எம் ஈ துறையின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. அதோடு, எம் எஸ் எம் ஈ கடன் போர்ட்ஃபோலியோ வளர்ச்சியை உறுதி செய்யும் அதே வேளையில் எம் எஸ் எம் ஈ களுக்கான நிதி தேவையை செயல்படுத்துவதற்கான தகவல் மற்றும் பகுப்பாய்வு தீர்வுகள் பற்றிய நுண்ணறிவு மற்றும் ஆழமான புரிதலுடன் நாடு முழுவதும் உள்ள எம் எஸ் எம் ஈ கடன் வழங்குபவர்களை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

மாநிலத்திலுள்ள வங்கிகள் மற்றும் கடன் நிறுவனங்களின் மூத்த அதிகாரிகள் இந்த மெகா மாநாட்டில் கலந்து கொண்டனர்.

தமிழகத்தில் எம் எஸ் எம் ஈ கடன் வழங்குவதில் தனியார் துறை வங்கிகள் முன்னிலை கடந்த 2024 ஜூன் மாதத்துடன் முடிவடைந்த காலாண்டின் அடிப்படையில், மொத்தக் கடனில் 51% பங்கைக் கொண்டு, தனியார் துறை வங்கிகள் தமிழ்நாட்டின் எம் எஸ் எம் ஈக்களுக்கான மிகப்பெரிய கடன் வழங்குநராக இருக்கின்றன. பெரும்பாலான கடன்களில் உற்பத்தித் துறைக்கு 37% வழங்கப்பட்டுள்ளன, மாநிலத்தில் வழங்கப்பட்ட மொத்த எம் எஸ் எம் ஈ கடன்களில் தங்கக் கடன்கள் 29% ஆகும். அதோடு, சொத்து சார்ந்த கடன்களானது குறைந்த இடர் பிரிவுக்கான கடன்களின் பங்கானது சிபில் எம் எஸ் எம் ஈ தரவரிசை (சி எம் ஆர்) 1-3 எனும் வீதத்துடன் 49% ஆக உயர்ந்துள்ளது. சென்னை, திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் எம் எஸ் எம் ஈ கடன் வழங்குதல் அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி, சென்னை 41%, திருப்பூர் 62%, கோவை 69%, மதுரை 57% எனும் வீதத்துடன் தனியார் வங்கிகளில் எம் எஸ் எம் ஈக்களுக்கு கடன் வழங்குவதில் அதிகப் பங்கைப் பெறும் நகரங்களாக இந்த நான்கு நகரங்களிலும் பார்க்கப்படுகிறது. சிபில்எம் எஸ் எம் ஈ தரவரிசை மற்றும் வணிக கடன் அறிக்கை

சிபில்எம் எஸ் எம் ஈ தரவரிசை மற்றும் வணிகக் கடன் அறிக்கை ஆனது எம் எஸ் எம் ஈ துறைக்கான கடன் ஓட்டத்தை எளிதாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆபத்துக் கொள்கைகளை உருவாக்குதல், விரைவான மற்றும் எளிதான அனுமதி மற்றும் கடன்களை வழங்குதல் மற்றும் நியாயமான போர்ட்ஃபோலியோ நிர்வாகத்தை உறுதி செய்வதில் அவை கடன் நிறுவனங்களுக்கு உதவுகின்றன.

வணிகக் கடன் அறிக்கையில் எம் எஸ் எம் ஈ இன் கடன் வரலாறு பற்றிய விரிவான தகவல்கள் உள்ளன, இதில் கடன் வசதிகளின் தன்மை மற்றும் அளவு, திருப்பிச் செலுத்தும் முறைகள் மற்றும் தற்போதைய கடமைகள் ஆகியவை அடங்கும். பணம் செலுத்துவதில் ஏதேனும் சிக்கல்கள் அல்லது தாமதங்கள் ஏற்படுவதையும் இது எடுத்துக்காட்டிவிடும். இந்த அறிக்கை ஆனது கடன் நிறுவனங்களுக்கு நிறுவனத்தின் கடன் நடத்தை பற்றிய தெளிவான படத்தை வழங்குகிறது, கடன் அபாயத்தை மதிப்பிட உதவுகிறது.

சிபில் எம் எஸ் எம் ஈ தரவரிசை 10 முதல் 1 வரை மதிப்பிடப்படுகிறது. இதில், 1 எனும் மதிப்பு மிகச் சிறந்த தரவரிசையாகும். இது எம் எஸ் எம் ஈகளின் கடன் தகவல் அறிக்கையின் ஒற்றை எண் சுருக்கத்தை வழங்குகிறது, வணிகத்தின் கடன் வரலாறு மற்றும் கடன் திருப்பிச் செலுத்தும் நடத்தை ஆகியவற்றை பொருத்து மதிப்பிடப்படப்படுகிறது. 50 கோடி வரையிலான தற்போதைய கடன் வெளிப்பாடு உள்ள நிறுவனங்களுக்கு மட்டுமே இந்த ரேங்க் கிடைக்கும்.

இந்திய வணிகங்களுக்கு கடன் வழங்குவதற்காக, எம் எஸ் எம் ஈ கடன் பிரிவுக்கு ஆதரவு தெரிவிப்பதோடு, டிரான்ஸ்யூனியன் சிபில் ஆனது இந்தியா முழுவதும் இந்த எம் எஸ் எம் ஈ மாநாட்டின் தொடர்ந்து நடத்தும்.

# கார்க்கி தமிழ்க் கழகம் மற்றும் சில்வர்சோன் அமைப்பு இணைந்து நடத்தும் "தமிழ் ஒலிம்பியாட்"




சென்னை, 22 அக் 2024: கல்வியின் எதிர்காலம் 2024 எனும் மாநாடு ஐஐடி சென்னை ஆராய்ச்சிப் பூங்காவில் இன்று நடைபெற்றது. டபிள்யூ ஏ எஸ் சி மற்றும் ஏ ஐ ஏ ஏ எஸ் சி அமைப்புகளின் சார்பில் அமெரிக்கன் உலகப் பள்ளி ஒருங்கிணைத்த இந்த நிகழ்வில் பாடலாசிரியர் மற்றும் தமிழ் மொழி ஆராச்சியாளர் மதன் கார்க்கி மற்றும் அவரது மனைவி நந்தினி கார்க்கி ஆகியோர் இணைந்து தங்கள் கார்க்கி தமிழ்க் கழகம் எனும் அமைப்பை அறிமுகம் செய்தனர்.


பள்ளிகளில் வேதியல் இயற்பியலுக்கு ஆய்வகங்கள் இருப்பது போல் முதன் முதலாக தமிழ் ஆய்வகம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளனர். தமிழ்நாடு மற்றும் உலகெங்கும் தமிழர் வாழும் பகுதிகளில் தமிழ் மொழியை மாணவர்கள் ஆர்வத்தோடு பயிலும் வண்ணம் மென்பொருள் கருவிகள், தமிழ் சொல் மற்றும் இலக்கண விளையாட்டுகள், தமிழ் வழியாக உலக அறிவு, பாடல்கள், கதைகள், நூல்கள், போட்டிகள் என்று இந்த ஆய்வகத்தை அமைத்துள்ளனர். இந்த ஆண்டு தமிழ்நாட்டில் பல்வேறு பள்ளிகளில் இந்த ஆய்வகம் தொடங்கவுள்ளது.

இந்த நிகழ்வின் முக்கியமான அறிவிப்பாக உலகின் முதல் 'தமிழ் ஒலிம்பியாட்' துவங்கப்பட்டது. ஆங்கிலம், கணிதம், அறிவியல் போன்ற துறைகளுக்கு நடத்தப்படும் உலகளாவிய ஒலிம்பியாடை உலகெங்கும் உள்ள தமிழ் மாணவர்கள் எழுதும் வண்ணம் கார்க்கி தமிழ்க் கழகமும் சில்வர் சோன் அமைப்பும் இணைந்து இந்த தமிழ் ஒலிம்பியாடை நடத்துகின்றன. தமிழ்நாடெங்கும் இருந்து வந்திருந்த பள்ளிகளின் மாணவர்களின் முன்னிலையில் 'தமிழ் ஒலிம்பியாட்' அறிமுகம் செய்யப்பட்டது. மாணவர்களின் பலத்த கைதட்டலுக்கிடையில் இந்த அறிமுகம் நிகழ்ந்தது. டபிள்யூ ஏ எஸ் சி மற்றும் ஏ ஐ ஏ ஏ எஸ் சி அமைப்பின் நிர்வாகிகள் கல்வியாளர்கள் முனைவர் மோகனலட்சுமி, முனைவர் செந்தில், மற்றும் குமரேஷ் அவர்களோடு இணைந்து மேடையில் மதன் கார்க்கியும் நந்தினி கார்க்கியும் அறிவிப்பை வெளியிட்டனர்.

ஃபியூச்சர் ஆஃப் எஜ்ஜுகேஷன் மாநாட்டில் கல்வியின் எதிர்காலம் குறித்து, பயிற்று முறை, உணவு, தேர்வு முறை போன்ற பல்வேறு தலைப்புகளில் கல்வியாளர்கள் உரையாற்றினர். சிறந்த பள்ளிகளுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

மாணவர்களுக்கு தமிழின் மீதும் அறிவின் மீதும் ஆர்வத்தைத் தூண்டவேண்டும் என்ற நோக்கில் கார்க்கி தமிழ்க் கழகம் தமிழ் ஆய்வகங்கள் மற்றும் தமிழ் ஒலிம்பியாடுக்கான பணிகளை மேற்கொள்கிறது.

# அப்போலோ மருத்துவமனை, 500 ரோபோடிக் இதய அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொண்டு இதய நோய் சிகிச்சையில் முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது!




சென்னை, 22 அக் 2024: சென்னையில் உள்ள அப்போலோ மருத்துவமனை இதய நோய் சிகிச்சையில் ஒரு குறிப்பிடத்தக்க மாபெரும் சாதனையை எட்டியுள்ளது. அதாவது 500 ரோபோடிக் இதய அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளது. இந்த மைல்கல் சாதனை, ரோபோ உதவியுடன் மேற்கொள்ளப்படும் இதய அறுவை சிகிச்சையில் ஒரு முன்னோடி மருத்துவமனையாக அப்போலோவின் முக்கியத்துவத்தையும், நிபுணத்துவத்தையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது. நோயாளிகளின் நலனை மட்டுமே மையமாகக் கொண்ட சிகிச்சையை வழங்குவதில் அப்போலோ மருத்துவமனை காட்டி வரும் அதன் உறுதிப்பாட்டை இது நிரூபிக்கிறது. இந்த மைல்கல் சாதனை, குறைந்தபட்ச ஊடுருவல் அறுவை சிகிச்சைத் துறையில் அப்போலோ மருத்துவமனையின் நிபுணத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. இதய நோய்கள் உள்ளவர்களுக்கு எளிதில் குணமடையும் வாய்ப்பை இது கணிசமாக மேம்படுத்துகிறது.

ரோபோடிக் உதவியுடன் செய்யப்படும் இதய அறுவை சிகிச்சையானது, ஸ்டெர்னோடோமி அல்லது மார்பில் பெரிய அளவில் துளையிட்டு சிகிச்சை செய்யாமல் துல்லியமான சிகிச்சையை மேற்கொள்வதன் மூலம் இதயப் பராமரிப்பில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த அதிநவீன தொழில்நுட்பம், சிறிய கீறல்கள் மூலம் சிக்கலான நடைமுறைகளைச் செய்ய வகை செய்கிறது. இதில் சிறிய ரோபோ கைகள், உயர் வரையறை 3டி கேமரா ஆகியவை பயன்படுத்தப்படுகிறது. இது பாரம்பரிய முறையில் செய்யப்படும் திறந்த இதய அறுவை சிகிச்சையை விட பல வகையான மேம்பட்ட நன்மைகளை வழங்குகிறது. டாக்டர் எம்.எம். யூசுப் தலைமையிலான குழு, கரோனரி தமனி பைபாஸ் கிராஃப்ட் சர்ஜரி (சிஏபிஜி), இதய வால்வு சிகிச்சை / மாற்று சிகிச்சை, சிக்கலான இதய நோய் சிகிச்சைகள் உள்ளிட்ட பெரிய அளவிலான சிகிச்சை நடைமுறைகளை வெற்றிகரமாகச் செய்துள்ளது.

குறுகிய காலத்தில் குணம் அடைந்து நலம் பெறுதல், நோயாளிகளுக்குக் குறைந்த வலி, குறைந்த இரத்த இழப்பு, ஸ்டெர்னோடோமி இல்லாததால் தொற்றுநோய்க்கான ஆபத்து இல்லாமை ஆகிய முக்கிய பலன்கள் இதில் நோயாளிகளுக்குக் கிடைக்கிறது. பல நோயாளிகள் அறுவை சிகிச்சைக்கு அடுத்த நாளே நடக்கத் தொடங்குகின்றனர். 3 முதல் 4 நாட்களுக்குள் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்ப முடியும். பாரம்பரிய இதய அறுவை சிகிச்சையில், முழு அளவில் குணம் அடைந்து இயல்பு நிலைக்குத் திரும்ப, 3 முதல் 6 மாதங்கள் தேவைப்படும். அத்துடன் இம்முறையை ஒப்பிடும்போது இந்த நவீன சிகிச்சை முறையில், பொதுவாக 2 முதல் 3 வாரங்களுக்குள் இயல்பு நிலைக்குத் திரும்பி, அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். நீண்ட கால அடிப்படையில், கரோனரி தமனி பைபாஸ் ஒட்டுதல் (சிஏபிஜி) நடைமுறைகளின் போது கால் நரம்புகளுக்கு பதிலாக உள்புற தொராசிக் தமனிகளைப் பயன்படுத்துவது சிறந்த நீண்டகால விளைவுகளை வழங்குகிறது. இது எதிர்கால அடைப்புகளின் அபாயத்தைக் கணிசமாகக் குறைக்கிறது.

அப்போலோ மருத்துவமனைகள் குழுமத்தின் நிறுவனர்-தலைவர் டாக்டர் பிரதாப் சி ரெட்டி இது குறித்துக் கூறுகையில், "அப்போலோ மருத்துவமனை, சுகாதார சேவைகளின் தரத்தைத் தொடர்ந்து உயர்த்தி வருகிறது. நாங்கள் வெற்றிகரமாக செய்து முடித்திருக்கும் 500 ரோபோடிக் இதய அறுவை சிகிச்சைகள் எங்கள் நிறுவனத்திற்கு மட்டுமல்லாமல், இந்தியாவில் இதய நோய் சிகிச்சையிலும் ஒரு மைல்கல்லாகும். இத்தகைய மேம்பட்ட நடைமுறைகளை செயல்படுத்துவதன் மூலம், குறைந்தபட்ச ஊடுருவல் சிகிச்சை முறைகளை வழங்கி, எங்களிடம் வரும் நோயாளிகள் குணமடைந்து விரைவில் நலம் பெறவேண்டும் என்பதை உறுதி செய்வதோடு, அதையே எங்களது நோக்கமாகவும் கொண்டுள்ளோம்." என்றார்.

அப்போலோ மருத்துவமனையின் ரோபோடிக் மற்றும் குறைந்தபட்ச ஊடுருவல் இதய அறுவை சிகிச்சை மருத்துவ நிபுணர் டாக்டர் எம்.எம்.யூசுப் இது குறித்துக் கூறுகையில், "500 ரோபோடிக் இதய சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொண்டிருக்கும் ஒரு மைல்கல்லை எட்டுவது என்பது நவீன மருத்துவ தொழில்நுட்பத்தின் வளர்ந்து வரும் திறன்களுக்கும், எங்களிடம் வரும் நோயாளிகள் எங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் ஒரு சான்றாகும். ரோபோ உதவியுடன் செய்யப்படும் அறுவை சிகிச்சை மூலம், நாங்கள் விரைவாக குணம் அடைதல், குறைந்த வலி ஆகிய நன்மைகள் கிடைக்கின்றன. இதன் மூலம் நோயாளியின் சிகிச்சை அனுபவம் உண்மையிலேயே சிறப்பாக மாறுகிறது. இந்த இதய சிகிச்சையில் ஏற்பட்டிருக்கும் இந்த முன்னேற்றம் குறிப்பாக 30 முதல் 60 வயதுடைய நோயாளிகளுக்குக் அதிக அளவில் பயன் அளிக்கும். அவர்கள் விரைந்து தங்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிப் பணிகளை மேற்கொள்ளலாம். பாரம்பரிய அறுவை சிகிச்சையை விட கணிசமாக, மிக துரிதமாக குணமடையும் பலனையும் இது வழங்குகிறது." என்றார்.

சென்னை அப்போலோ மருத்துவமனை, மருத்துவ தொழில்நுட்பத்திலும் நோயாளிகள் பராமரிப்பிலும் தொடர்ந்து முன்னணியில் உள்ளது. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் சுகாதார சேவைகளில் சிறப்புக்கான வரையறைகளை இந்த மருத்துவமனை உருவாக்கி வருகிறது. ரோபோடிக் அறுவை சிகிச்சையின் ஆரம்ப செலவு பாரம்பரிய முறைகளை விட அதிகமாக இருக்கும். ஆனாலும், குறைந்த காலமே மருத்துவமனையில் தங்கியிருப்பது, விரைவான முறையில் குணம் அடைதல் ஆகியவை, நோயாளிகளுக்குப் பயன் அளிக்கும். இவை பொருளாதார ரீதியாக நோயளிகளுக்குப் பயன் அளிப்பதால் இந்த நடைமுறை அவர்களின் விருப்பத் தேர்வாக அமைகிறது. அப்போலோ மருத்துவமனை அதன் ரோபோடிக் அறுவை சிகிச்சைத் திட்டத்தை மேலும் மேம்படுத்துவதற்கும், மருத்துவப் புதுமைக் கண்டுபிடிப்புகளில் புதிய மைல் கல்லை எட்டுவதற்கும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது.

# மாமல்லபுரத்தில் 'நோ பார்க்கிங்'கில் காரை நிறுத்த முயன்றதை தடுத்த காவலாளி மீது தாக்குதல் 2 பெண்கள் உள்பட 3 பேர் கைது

சென்னை, 22 அக் 2024: மாமல்லபுரத்தில் 'நோ பார்க்கிங்'கில் காரை நிறுத்த முயன்றதை தடுத்த காவலாளி மீது தாக்குதல் நடத்திய 2 பெண்கள் உள்பட 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்திற்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து சென்றனர். இந்நிலையில் மாமல்லபுரம் ஐந்துரதம் புராதன சின்னம் அருகில் நோ பார்க்கிங் வழியாக கார் ஒன்று செல்ல முயன்றது. அப்போது அங்கு பணியில் இருந்த காவலாளி ஏழுமலை (வயது 45) என்பவர் காரை ஐந்துரத வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்துமாறு கூறினார். அதை மீறி காரில் வந்தவர்கள் காரை நோ பார்க்கிங்கில் நிறுத்த முயன்றதாக தெரிகிறது. இதனால் ஆத்திரத்தில் ஏழுமலை அவர்களை திட்டியதாக கூறப்படுகிறது.

உடனே காரில் இருந்து இறங்கிய டிப்டாப் உடை அணிந்திருந்த 2 பெண்கள் உள்ளிட்ட 4 பேர் "ஏய் யாரை பார்த்து திட்டுகிறாய்" என ஆவேசமடைந்து, நடுரோட்டிலேயே ஏழுமலையை சரமாரியாக அடித்து உதைத்தனர். அவர்களுடன் வந்த ஆண்களும் சேர்ந்து அவரை கடுமையாக தாக்கினர். பதிலுக்கு ஏழுமலை தாக்க முயற்சிக்கவே, 4 பேரும் அவரை கீழே தள்ளி அவரை நையபுடைத்தனர். அதில் ஒரு பெண் காவலாளி ஏழுமலை வைத்திருந்த 2 அடி நீள பிளாஸ்டிக் குழாயை பிடுங்கி, அந்த குழாய் 2 துண்டாக உடையும் வரை அவரை தாக்கி சட்டை கிழித்தார்.